## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.52/2021

2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.2 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 30.10.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேந்திரன் (PW–2 ) | வயது | : | 60 /2025 |
| த/க பெயர் | : | திரு. நடேசன் | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | ஆலாத்தூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. யார் யார் மீது வழக்கு போட்டுள்ளார் என்றால் பாப்பையன் திருஞானம் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார், என்ன பரிகாரம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து பாப்பையன் அப்பா தங்கவேலுக்கு அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். தங்கவேல் தற்போது உயிருடன் இருக்கிறாரா என்றால் 1991 இல் இறந்து விட்டார். தங்கவேலுக்கு பிரதிவாதிகளான பாப்பையன், பூங்கொடி ஆகியோர் வாரிசுகளாக உள்ளார்கள் என்றால் சரிதான்.
2) தங்கவேலிடம் வாதி திருஞானத்தில் அப்பா முருகையன் தாவா சொத்தை பதிவு செய்ய வேண்டி கேட்டாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. தங்கவேலிடம் வாதி திருஞானத்தில் அப்பா முருகையன் தாவா சொத்தை பதிவு செய்ய வேண்டி கேட்டதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். வாதியின் தகப்பனாரும் பிரதிவாதியின் தகப்பனாரும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையெழுத்து இட்டேனா என்றால் இல்லை. தற்போது தாவா சொத்து பிரதிவாதிகள் பாப்பையன், பூங்கொடி பெயரில் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

3) தாவா சொத்துக்கான பட்டா தற்போது பிரதிவாதிகளின் பெயரில் உள்ளது என்றும் தாவா சொத்தானது வாதியின் தந்தை பிரதிவாதியின் தந்தையிடம் விற்பனை செய்து விட்டார் என்பதால் தாவா சொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாதி எனக்கு வேண்டிய நபர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.01 18:04:07 +0530

District Munsif
Mannargudi.